**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 314/2019**

**02.08.2025.**

**P.W.2- லதா பாண்டியம்மாள்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு வழக்கு விபரங்கள் தெரியும். நான் பி.ஏ படித்துள்ளேன். நான் தற்போத வடகாட்டுப்பட்டியில், பாண்டி கோயில் தெருவில் குடியிருந்து வருகிறேன். வாதி எனது சகோதரி என்றால் சரிதான். பிரதிவாதிகள் பேச்சியம்மாள், பாண்டி, அய்யனார் எப்படி பழக்கம் என்றால் சிறுவயதில் இருந்தே பழக்கம். நான் வேலை ஏதும் பார்க்கவில்லை. எனது தாயார் பெயர் தாமரைக்கனி. எனது தாயார் விவசாயம் பார்த்து வருகிறார். வாதி சத்யா தற்போது வேலை பார்க்கவில்லை. 2014 மற்றும் 2015 ம் ஆண்டுகளில் வேலை பார்த்தார். வாதி சத்யா சென்னையில் குடியிருந்தார், தற்போது 2 மாதங்ககளாக கீழப்புதுாரில் இருக்கிறார். பிரதிவாதிகள் பூக்கடை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது நிரு பண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளது போல பேச்சி எவ்வளவு கடன் வாங்கினார், பாண்டி எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் இருவரும் ஒன்றாக சேர்ந்து ரூ.3,60,000/- கடன் வாங்கினார். கடன் வாங்கிய தொகையை அக்கா கொடுத்தார். மேற்படி கடன் தொகையை 500 ரூபாய் கட்டுகளாகவும், ரூ100 கட்டுகளாகவும் கொடுத்தார். மேற்படி கடன் தொகையை எனது வீட்டில் வைத்து தான் கொடுத்தார். அப்போது நான், எனது அக்கா, பாண்டி, பேச்சியம்மாள் இருந்தார்கள். மேற்படி உள்ள நபர்களை தவிர வேறுயாராவது இருந்தார்களா என்றால் பாண்டியின் அண்ணன் அய்யனார் இருந்தார், அவர் சாட்சி கையெழுத்து செய்தார். மேற்படி கடனை எதற்காக வாங்கினார் என்றால் சில்லரை கடன்களை அடைப்பதற்காக வாங்கினார். அய்யனாரும் பூக்கடை தான் நடத்துகிறார். பிரதிவாதிகள் எவ்வளவு

செலுத்தினார்கள் என்றால் கொடுக்கவில்லை. மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியும். மேற்படி தொகையை பிரதிவாதிகளிடம் நான் நேரடியாக கேட்டேன். கடன் வாங்கி சுமார் 1 வருடம் கழித்து பல தடவை கேட்டேன் , எத்தனை தடவை என்று ஞாபகமில்லை. என்னை தவிர வேறு யாராவது கேட்டார்கள் என்றால் எனது அம்மா, அப்பா, அண்ணன் கேட்டார்கள். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாணை நடத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவை பிரதிவாதிகள் வாபஸ் பெற்றார்கள் என்றால் சரிதான். மாவட்ட கண்காணிப்பாளர் அலுவல கத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி மேக்கிழார்பட்டி காலனியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். கடன் உறுதி சீட்டு நீல நிற மையினால் எழுதப்பட்டது. நான் கருப்பு மையால் கையெழுத்து செய்தேன் , மற்றவர்கள் கருப்பு மையால் கையெழுத்து செய்தார்கள். கைரேகை பேச்சியம்மாள் உடையது, அது நீலநிற மை ஆகும் , புரோநோட்டில் உள்ள கையெழுத்து , கைரேகை பிரதிவாதிகள் உடையது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் வட்டி தொழில் செய்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ரூ50,000/-தான் வாங்கினார்கள் என்றாலும், அதை திரும்ப செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. அதிகப்படியான வட்டி கேட்டதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல , கைரேகை பரிசோதனை செய்தால் தெரியவரும் என்றால் சரிதான்- நான் தவறான நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் தவறுதலான விலாசத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

ம-வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.02 13:19:52 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.